Gamani Corea Foundation
Freda Corea Awards
2024

# இந்த ஆண்டும் ப்ரீடா கொரயா விருது விழா

கலாநிதி காமனி கொரயாவின் சிந்தனைகளுக்கு கௌரவம் அளிக்கும்
வகையிலும் அவருடைய

மறைந்த அன்னையாரின் நினைவாகவும் இந்த பிரீடா கொரயா விருது வழங்கும்
விழா

இரண்டாவது முறையும் இந்த வருடம் (2024) நடத்துவதற்கு காமனி கொரயா
நிதியம் தீர்மானம்

செய்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். கடந்த வருடம் இந்த
வேலைத்திட்டத்துக்கு

கிடைத்த வெற்றியும், இவ்விழாவுடன் தொடர்பு கொண்டோர் அனைவரும்
காண்பித்த

உற்சாகமும் தான் விருது விழாவை இந்த ஆண்டும் நடத்த காரணமாகின்றது. சமூகப்

பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்க்கையை வெற்றிகொண்ட சாதனைப் பெண்கள் மற்றும்

அவர்கள் குழுக்களாக இணைந்து ஆற்றி வரும் சுயதொழில் முயற்சிகளையும் இவ்விழா

கௌரவிக்கவுள்ளது.

குடும்பத்தை ஈடேற்றம் செய்வதன் மூலம் வறுமையை வெற்றி கொண்டுள்ள இப்பெண்களை

நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய வைப்பதை இத்திட்டம் தன் நோக்கமாகக்

கொண்டுள்ளது. கீழ்மட்ட மற்றும் மத்தியதர வருமானம் ஈட்டும் பெண்கள் மற்றும் அவர்களைப்

பற்றி எழுதும் எழுத்தாளர்களுக்கு மாகாண மட்டத்தில் தெரிவு செய்து பரிசல்கள் வழங்குவது

இவ்விருது திட்டத்தின் நோக்கமாகும். சமூக சவால்கள், தடைகள் என்பனவற்றை வெற்றி

கொண்ட இலங்கைப் பெண்களின் விடாமுயற்சி செயற்பாடுகளை மூன்று பிரிவுகளாக பிரித்து

இவ்விருது போட்டியில் அடையாளம் காண்பதற்கு காமனி கொரயா நிதியம் தீர்மானித்துள்ளது.

· குடும்பத்தின் சமூக மட்டத்தை உயர்த்துதல்

· சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை

கட்டியெழுப்புதல்

· உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புகழையும் வரவேற்பையும் பெறும் வகையிலான

செயற்பாடுகள் இவற்றில் அடங்கும்.




இந்த வேலைத்திட்டத்தின் இறுதி நோக்கம் குடும்பங்களை பொருளாதார ரீதியில் உயர்த்துவதன்

மூலமாக நாட்டின் அபிவிருத்திக்காக பெண்களின் ஒத்துழைப்பை பெறுவதே ஆகும். முதலில்,

ப்ரீடா கொரயா விருது விழாவில் பங்கேற்க விரும்பும் எழுத்தாளர்கள் முறையாக நிரப்பப்பட்ட

விண்ணப்பப் படிவத்துடன் அவர்கள் தெரிவு செய்த பெண்மணியைப் பற்றிய கதையின்

சாராம்சத்தையும் (யு4 தாளில் ஒரு பக்கத்தில் மட்டும்) சேர்த்து எங்களுக்கு அனுப்பி பதிவு செய்து

கொள்ள வேண்டும். அதிலிருந்து தெரிவு செய்யப்படும் எழுத்தாளர்கள் இரண்டாம் கட்டத்துக்கு

நகர்த்தப்படுவார்கள்.

இரண்டாவதாக, அப்பெண் நடத்தி வரும் சுயதொழில் அல்லது குழுவாக இணைந்து நடத்தும்

சமூக அபிவிருத்தி திட்டம் பற்றி விவரமான திட்ட அறிக்கையையும் அப்பெண்மணியைப் பற்றிய

விவரங்கள் அடங்கிய சுவாரஸ்யமான கட்டுரையையும் எழுத்தாளர்கள் எமக்கு எழுதி அனுப்ப

வேண்டும். இக்கட்டுரையை ஒழுங்குமுறையாகவும் ஆய்வு ரீதியாகவும் எழுதி எமக்கு அனுப்பப்பட

வேண்டும்.

மூன்றாவதாக எழுத்தாளர்களுக்கு தங்கள் பிரதேசத்தில் அல்லது வேறு மாகாணங்களில் வசிக்கும்

ஒரு சாதனைப் பெண்ணின் கதையை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுத முடியும்.

நான்காவதாக, அனைத்து எழுத்தாளர்களும் தாங்கள் தெரிவு செய்த பெண்ணை அல்லது மகளிர்

குழுவை நேரிடையாக சந்தித்து, உரையாடி தமது வாழ்வில் சந்தித்த சவால்கள் அதனால் ஏற்பட்ட

விளைவுகள் மற்றும் அதனை வெற்றி கொண்ட விதம் பற்றிய கட்டுரையை எழுதி அனுப்ப

வேண்டும்.

காமனி கொரயா நிதியம் ஒரு விசேட குழுவினால் புள்ளி அடிப்படையிலான ஒரு தேர்வு

முறையைப் பயன்படுத்தி வெற்றிபெறும் கட்டுரை மற்றும் திட்ட அறிக்கையை தெரிவு செய்யும்.

மேலும் இந்த விருது போட்டியில் எழுத்தாளர்கள் கலந்து கொள்வதற்கு ஏதுவான பதிவு செய்தல்

தொடர்பாக எதிர்வரும் தினங்களில் பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்படவுள்ளன.

இம்முயற்சியில் வெற்றி பெறுவதற்காக இச்சாதனைப் பெண்கள் என்னென்ன பிரச்சினைகளை

சந்தித்தார்கள் என்பன தொடர்பாக எழுத்தாளர்கள் சேகரித்த ஆய்வு தரவுகள் மற்றும்

தகவல்களைப் பயன்படுத்தி ஒரு கொள்கை அறிக்கையை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.

பெண்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை ஈடேற்றம் செய்வதற்கான எதிர்கால

கொள்கைகளை உருவாக்குவதற்கு இந்தத் தரவுகள் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.